# ஆத்ம ஜோதி.



" பத்துக் கரத்தி பராபரன் பைங்தோடி
வித்தகி என்னுள்ளம் மேவி நின்றளே"

ஓம்

# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

சோதி 3 | கா௵ புரட்டாதி மீ | சுடர் 11

## பொருளடக்கம்


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | உலக அன்னை | கி. வா. ஜெகந்நாதன் | 293 |
| 2 | பிரார்த்தனை | ஆதிசங்கரர் | 294 |
| 3 | தேவி உபாசனை | ஆசிரியர் | 295 |
| 4 | வடிவாம்பிகை தோத்திரம் | சிலம்புநாதபிள்ளை | 300 |
| 5 | நாகேஸ்வரியம்மை தோத்திரம் | முத்துக்குமாரசாமிப்புலவர் | 301 |
| 6 | நாகதீபம் அல்லது நயினாதீவு | குலசபாநாதன் | 302 |
| 7 | சக்திக்கனல்! | பரமஹம்ஸதாஸன் | 305 |
| 8 | தேவி வேண்டுதல் | பித்துக்குளி | 306 |
| 9 | காரைதீவுக்கண்ணகி அம்மன் | செல்லத்துரை | 308 |
| 10 | அம்மா | | 309 |
| 11 | ஆதி சக்தி அஷ்டோத்தர சத நாமாவளி | | 311 |
| 12 | சைவம் கண்ட சமதர்ம சமத்துவம் | க-ப. ஷ. சுந்தரசர்மா | 314 |
| 13 | உற்றார் யார் | செல்வநாயகம் | 316 |
| 14 | ஓம் சக்தி என்பவர் உண்மை காண்பர் | பாரதியார் | 317 |
| 15 | செய்தித்திரட்டு | | 318 |
| 16 | மங்கள ஆரத்தி | பித்துக்குளி முருகதாஸ | 320 |





## ஆத்ம ஜோதி
(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆயுள் சந்தா | ... | .... | ரூ. | 75-00 |
| வருடச் சந்தா | ... | .... | ரூ. | 3-00 |
| தனிப்பிரதி | ... | .... | ச. | 30 |

"ஆத்மஜோதி" நிலையம்,
நாவலப்பிட்டி. — (இலங்கை)

# உலக அன்னை.

கி. வா. ஜகந்நாதன்

வானளா வியமலையில் மேகக் கூட்டம்
மலிந்துதிரண் டினியமழை பொழியுங் காலைத்
தேனளா வியமலர்கள் குலுங்க நின்று
திருமகள்போல் மரமெல்லாம் நிற்கும் காலை
ஊனளா வியஉயிர்கள் உணர்ச்சி பொங்கி
உவகையோடே பலமுயற்சி செய்யுங் காலை
யான்அளா வியஅன்பில் அங்கே சக்தி
இருக்கின்றாள் அருள்தனையே ஈந்தாள் என்பேன்.

இலையினிலே பசுமைஅவள் போதில் வண்ண
எழிலுமவள் புனலினிலே தண்மை யாவாள்
உலையினிலே படர்கனலில் வெப்பம் அன்னாள்
ஊக்குகின்ற ஆற்றலவள் உலக மெல்லாம்
கலையினிலே அறிவினிலே ஓங்கி நின்று
காண்கின்ற இன்பம்அவள் அருளே கண்டீர்
நிலையிலதாம் உலகையெலாம் அழகாக் காட்டும்
நித்தசிவ சக்தியருட் கெல்லை உண்டோ

பொன்னெல்லாம் பூடணமாய்ச் சிறத்தல் போலப்
பூவெல்லாம் மாலையாய்ப் பொலிதல் போலக்
கன்னலெலாம் கற்கண்டாய்ச் செறிதல் போலக்
கன்னிமகள் உயர்தாயாய்க் கனிதல் போல
மன்னுகின்ற மேகமெலாம் மழையாய் ஆறாய்
மாகடலாய்ப் பரந்துவிரி மாட்சி போல
இன்னுயிராய்நிலவுசக்தி பொருளை யெல்லாம்
எழில்படைத்துப் பயன்றருமா றாக்கு கின்றாள்.

வாய்திறந்து பேசாத குயிலின் வாக்கில்
மனங்களிக்கும் இனியஇசை வைத்தாள் நீலம்
ஏய்நிறங்கொள் மயில்தோகைக் கழகைக் கூட்டி
இனிதாக அம்மயிலை ஆடச் செய்தாள்
தூய்மையுறு புல்லுண்டு கன்றா டீந்தச்
சூழுலக மக்களுக்கும் பாலை ஈய
மேயபசு வினுக்கமைத்தாள் தென்றற் குள்ளே
விழைசுகத்தைப் பொருத்திவைத்தாள் உலக அன்னை.

# பிரார்த்தனை

பரம்பொருளாகிய சிவபெருமானின் தருமபத்தினியாக அவரது வாமபாகத்தில் அமர்ந்திருக்கு தாயே!

உன்னைத்துதிக்கும் வேதங்களாலும் உனக்கு ஏவல் புரியும் தேவர்களாலும் நேரே காணமுடியாததாய், உன்னுடைய நாதனது கண்களுக்கே புலப்படுகின்ற தாயுள்ள உன்னுடைய திருமேனியை நான் எப்படிக் காண்பேன்?

இன்னொலி செய்கின்ற நூபுரங்களைக்கொண்டே உன் திருவடிச் சோதியிலே மனத்தைச் செலுத்த இயலும். கயல் போல் மிளிர்கின்ற உன் கண்களைக் கொண்டே 'பரமேசனையும் வசப்படுத்தியவை இவை' என்று உன் திருமுகச்சோதியை நோக்கி என் மனம் அங்காந்திருக்கின்றது. இமயமலையிலே தோன்றிய ஆனந்த மயமான கொடி யொன்று, அங்குள்ளதொரு அடிமரத்திலே படர்ந்து, செழிப்புற வளர்ந்து, கொங்கைகளாகிய பழங்களோடும் சொற்களாகிய இன்சாற்றோடும் பெயர்ந்து, நான் இருக்குமிடந்தேடி என் நோய்களைத் தீர்க்க வந்ததே என்று விம்மலுறுகிறேன்.

தாயே! நீயே வேதங்களையருளி சகல தருமங்களையும் விதித்தாய்; வள்ளன்மை மிக்க குபேரனும் உன்னை அடிபணிந்தே பொருட் செல்வங்களை யெல்லாம் பெற்று வழங்குகிறான். காமனை வென்ற பரம்பொருளையும் காமவசப்படுத்தி, காம தேவனுக்கு வெற்றி அளித்தவன் அல்லையோ நீ? நல்லோர் முக்தி பெறுவதற்கு விதையாவதும் நீயே! ஆதலால், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்க வல்ல நீயே எனக்குப் பக்திப்பெருக்காகிய நற்பாலைச் சுரந்தருளி, என் மனத்தை உன்னிடம் நிலைபெற்றிருக்கும் படியாகச்செய்ய வேண்டும்.

—ஆதி சங்கரர்.

# — தேவி உபாசனை —

ஆசிரியர்

அன்னையைத் தெய்வமாக வழிபடும் முறை உலகெங்கணும் தொன்று தொட்டு இருந்துவரும் வழக்கமாகும். அது எந்நாட்டினர்க்கும் எச்சாதியனர்க்கும் பொதுவானதுமாகும். தாயும் தந்தையும் சக்தியும் உலகத்தையே சொர்க்கமாக்க வல்லன என்பது பல நல்லறிஞர் முடிபு. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது பழந்தமிழ் வாக்கு. 'அன்னையின் பாதத்தை முத்தமிடுகின்றவன் சொர்க்கத்திற்குப் போகிறான் என்றார் நபிநாயகம். ஆனால், தெய்வத்தை அன்னையாகப்பாவித்து வழிபடும் கொள்கை எங்கள் இந்துமதத்திலேயே தோன்றியதெனலாம். அது இன்று சிறப்பாய்விளங்குவதும் அம்மதத்திலேயாம்.

நாகரீக ஏணியில் ஆரம்பப்படிகள் சிலவற்றைத் தாண்டிய மனிதன் தன்னைச் சுற்றியிருந்த இயற்கை யன்னையின் குணங்கள் பல தாயின் குணங்களை ஒத்திருப்பதைக் கண்டதும் தாயைப் போலவே இயற்கையையும் தெய்வமாகப் போற்றியிருக்கவேண்டும். பின்னர் நாகரீக முதிர்ச்சியில் அவனுக்குச் சக்தியில் விருப்பு எழுந்ததும், சக்தி வழிபாடு ஓர் சமயக் கொள்கையாகப் பரவியதாகும். அத்தொடர்பில் சடப்பொருள்களின் தன்மையையும் சக்தியின் தன்மையையும் துருவி ஆராய்ந்த நமது மூதாதையர் அவை இரண்டும் ஒன்றேயெனக் கண்டு, அதற்குப் பிரகிருதியென்ற தனிப்பெயர் கொடுத்ததோடு, அது சக்திமயமானதெனவும் முடிவு கட்டினர். மேல்நாட்டு நவீன விஞ்ஞான விற்பன்னரும் சடப்பொருள் (Matter) சக்தி (energy) யென இரண்டு உண்மையில் இல்லையென்றும் மூந்தியது பிந்தியதின் மயமே யென்றும், எனவே உண்மையில் உள்ளது சக்தி ஒன்றே என்றும் இன்றுவற்புறுத்துகின்றனர். அதுமாத்திரமன்றி, இச்சக்திக்கு அழிவில்லை யென்பதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இவர்கள் பல்லாண்டுகளாகப் பிரயாசைப் பட்டுக் கண்டுபிடித்த சக்தியைப் போற்றி வழிபடுவதற்குப் பதிலாக, அதனை அடக்கியாண்டு தங்களுக்கு

உலக இன்பங்களையும் போக போக்கியப் பொருள்களையும் பெருக்குவதில் மாத்திரம் கவனத்தைச் செலுத்தியதினாலேயே இன்றைய உலகம் அணுக்குண்டுக்கும் நீர்க்குண்டுக்கும் அஞ்சி அல்லல்படும் நிலைக்கு வந்துள்ளது. தொன்று தொட்டுத்தொடர்பு இழக்காமல் அத்யாத்மவாழ்வில் தலை சிறந்து விளங்கிய தென்னாட்டில் கூட 'அறிவை அளித்தது அணுச்சக்தி; அழிவைத்தருவது ஓம் சக்தி.' என்பன போன்ற வாக்கியங்கள் கோயில்களின் பள்ளிக்கூடங்களின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் காட்சியைக் காண்கின்றோம்.

பல்லாயிரம் வருஷங்கட்கு முன் சக்தியின் இயல்பை நன்கு ஆராய்ந்த இந்து மத ஞானிகளும் யோகிகளும் புற உலகம் அக உலகம் இரண்டையுந் தாண்டி, அதற்கு மூலகாரணம் எது என்பதைத் திவ்ய திருஷ்டியால் அறிந்தனர். மாறி மாறி ஒடுங்கியும் விரிந்தும் வரும் சக்தியானது அனாதியானதென்றும் அழிவற்றதென்றும் அவர்கள் உணர்ந்து, சித்தாகிய பரம்பொருளே சக்திக்கு மூலமாதலின், சக்தியைக்கண்ட இடத்திலெல்லாம் தெய்வத்தன்மையையே கண்டு வழிபடலாயினர். எனவே, சக்திவழிபாடு முக்தியை அடைதற்குரிய நெறியாக விளங்கலாயிற்று. நாளடைவில் இது ஆசியாவின் மேற்றிசை நோக்கிச் சென்று சிரியா, எகிப்து, மோல்டா முதலாய இடங்களில் பரவியிருந்ததற்குப் போதிய சான்றுகள் புதை பொருளாராய்ச்சியின் மூலம் கிடைத்துள்ளன. பழைய பூமண்டலப் பரப்பில் கீழே முலகில் அதலம், விதலம் எனக் குறித்தது மேற்கண்ட நாடுகளையேயாம். கிறிஸ்துவுக்கு முன் பதினான்காம் நூற்றாண்டில் தற்போது டெல்லல்-அமர்னா வென அழைக்கப்படும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு எகிப்து தேசத்தைப் புகழுடன் ஆண்ட ஆமென்ஹோடெப் என்னும் சக்ரவர்த்தியினாலும் அவனது அறிவிலும் பதியன்பிலும் சிறந்த ராணியாம், நெபெட்டிதியாலும், பழைய தலை நகரான தேபீஸில் வாழ்ந்த வைதிககுருமார்களின் கொடுமையான கட்டுப்பாடுகளிலிருந்து மக்களுக்கு விடுதலை தரும்முறையில் நிறுவப்பட்ட ஆத்மமத சித்தாந்தத்தில் தெய்வம் இப்புவனத்தைப் படைத்துக்காக்கும் அப்பன் அம்மையாகப் போற்றப்பட்டுள்ளது. சிவபெருமானின் அஷ்டமூர்த்தத்துவம் ஒன்

றிலிருந்து இரண்டாகி மேலும மேலும் கூடிக்கொண்டு வந்திருக்க வேண்டுமென்பதற்கு ஆமத் மதத்தோத்திரங்களில் அத்தாட்சி யுள்ளன.

யாம் காணும் உலகமும் சர்வசிருஷ்டிகளும் ஒரு கற்ப காலத்தில் அழிந்து ஆதிசக்தியில் ஒடுங்கும் அந்தச் சக்தியும் சிவத்திலொடுங்கும். அப்போது சிவம் தானே தானாய தற்பர நிலையில் யாதாமொரு செயலுமற்றிருக்கும் பிறப்பு நீங்கி இளைப்பாறியிருக்கும் உயிர்கட்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு சிருஷ்டிமுதலாய தொழில்களைச் செய்வதற்குத் திருவுளங் கொண்ட சிவம் மீளவும் சக்தி சமேதராக விளங்குவர் என்பதே சைவசமயக் கருத்தாகும். சிவமதமானது தத்துவ ரீதியாக இந்த உச்சநிலையை அடைவதற்கு எத்தனை ஆயிரம் வருஷம் எடுத்ததோ யார் அறிவர்?

தென்னாட்டைப் பொறுத்தமட்டில் சங்க காலத்தில் சைவம் வைஷ்ணவம், புத்தம், சமணம் ஆகிய நான்கும் சிறப்பான நிலையில் சமரஸமாக இருந்த உண்மையைஎவரும் மறுக்க முடியாது. அப்போது சக்தி வழிபாடு, கௌமாரம், காணபத்யம், பைரவம் போல், சைவத்தின் ஓருகிளையாகவே இருந்துவந்தது. ஒழுக்கமற்ற தாந்திரிக வழக்கங்களாலும் உட்பிரிவுகளாலும் சமய நிலை இழுக்குற்றபோது, கௌமாரம் ஒன்றே மலினமெல்லாந் தீர்ந்த சுத்தசிவ அத்வைத மார்க்கமாகவும், ஏனையவை மலினப்பட்ட சைவமெனவும் அழைக்கப்பட்டன. இன்றுவரைக்கும் முருகன்வழிபாடு சிறப்பாக இருந்து வருகிறதற்கு முக்கிய காரணம் இதுவெனலாம். சக்தி உபாசகர்கள் வலது சாரி இடது சாரி யென்ற இரு கூறுகப் பிரிந்ததும் அக்காலத்திலேயாம். ஏறக்குறைய நானூறு பாடல்களால் சக்தி வழிபாட்டை விளக்கும் திருமந்திர நூலிலேயே இதற்குச் சான்றுகள் காணலாம்.

"சக்தியென்பாளொருசாதகப்பெண்பிள்ளை
முத்திக்குநாயகிஎன்பதறிகிலர்
பத்தியைப்பாழில்உகுத்தஅப்பாவிகள்
கத்தியநாய்போற்கதறுகின்றாரே"

என்கிறார் திருமூலர். நாலாந் தந்திரத்தில் ஆதாரவாதேயத் தலைப்பின்கீழ் முன்னிரண்டு வரிகளில் வசிஷ்டர், சுகர், சனகர்,

சனந்தனர், சனற்குமாரர் ஆகிய ஐவர்களும் அருளிய ஸம்ஹிதைகளின் கருத்தை விளக்கியபின், அடுத்த இரண்டு வரிகளில், மஹா வைரவ, கால வைரவ, சாமுண்டி, வாதுளம் முதலாய அறுபத்துநான்கு தாந்திரங்களைப் பின் பற்றிய வாமாசாரக் கொள்கையினரைக் குறிப்பிட்டுள்ளார். பிந்திய கூட்டத்தினரின் அனுசாரங்களும் தீச்செயல்களும் சைவம், வைஷ்ணவம் இரண்டையுங்கெடுத்ததுமன்றி புத்த மதத்தையும் மிகவும் கீழான நிலைக்குக் கொணர்ந்ததெனலாம். சங்கரர் தோன்றிய போது நாட்டில் இருந்த சமய நிலை இதுவாகும். நாடெங்கும் முக்கியமாக வடக்குப் பிரதேசங்களில், வாழ்வின் எல்லாத்துறைகளிலும் சீர்கேடு பரவியிருந்தது. போலித்துறவு மலிந்து மந்திர, யந்திர, தந்திரக்கொள்கைகள் வசியம், மோகனம், தம்பனம் முதலான வற்றைக் கலைகளாக்கிவிட்டன. இழுக்குற்றிருந்த புத்தமதத்தை மிகவும் நுட்பமான தத்துவ சாஸ்திர விளக்கத்தால் இருந்தவிடந்தெரியாமல் மறையச் செய்ததுடன் சங்கரர் நின்றுவிடவில்லை. அவரை அத்துவித வேதாந்தியாக மாத்திரம் கருதுவோர் அவர் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும், தேவி வழிபாட்டிற்கும் செய்த அருஞ்சேவையை அறியாதவர்களாவர் இந்துமதமென்னும் கற்பக தருவுக்கு புத்துயிர் கொடுத்து அதன் கிளைகளை மறுபடியும் உயர்ந்தும் விரிந்தும் வளர்ந்து சாந்தி நிழல் பரப்பச் செய்தவர் அவரேயாம். அவர் அருளிய சிவானந்தலஹரீ சௌந்தர்யலஹரீ, சுப்ரமண்யபுஜங்கம், கணேச பஞ்சரத்தினம், கௌரிதசகம் முதலிய தோத்திர நூல்கள் அவரது அரிய பக்தியை நமக்குத் தெரியச் செய்வதுடன், அவர் ஆற்றியுள்ள ஒப்பற்ற சிவத்தொண்டையும் நமக்கு விளக்குகின்றன. வேத உபநிடத உண்மைகளை அனுபூதியிலுணர்ந்து அவற்றிற்கு விரிவுரைவரைந்த சங்கரர் அந்த உண்மைகளுக்கு அப்பாலுள்ள தேவியின் சொரூபத்தைக் காண்பதோ, உரைப்பதோ இலகுவான காரியமல்லவெனப் பணிவுடனும் மிகுந்த அடக்கத்துடனும் கூறியிருப்பதையும் நோக்குக.

தேவி வழிபாட்டில் ஈடுபடுவோர்க்கு இருகண்கள்போல் அமைந்துள்ளவை மேலே குறிப்பிட்ட சௌந்தர்யலஹரீயும் லலிதாசஹஸ்ரநாமமுமாகும். மூந்தியதிற்கும் திருமூலர் பாடல்களுக்கும் நெருங்கிய கருத்தொற்றுமையுண்டு. பிந்தியது பிர

மாண்ட புராணத்தின் ஓர் பகுதியான லலிதோபாக்கியானத்தைத் தொடர்ந்து தேவியின் ஆயிரநாமங்களைத் தோத்திர முறையில் எடுத்துரைக்கும் நூலாகும். இதற்கு இணையான தோத்திர நூல் பிறிதொன்றில்லையென்பதே அறிஞர் முடிபு. சரஸ்வதி தேவியே லலிதா பரமேஸ்வரியின் கட்டளைப்படி இத்தோத்திரத்தைப் பாடியதாகப் புராணங் கூறுகின்றது. இதைப்பற்றிய ஏனைய விபரங்கள் 'ஆத்மஜோதி'யில் சந்தர்ப்பங் கிட்டும்போது வெளிவரும்.

தேவி வழிபாட்டின் உயர்வற உயர்ந்த புனிதத்தன்மையை இருபதாம் நூற்றாண்டில் உலகுக்கு வாக்காலும் வாழ்க்கையாலும் விளங்கிய பெருமை பகவான் இராமகிருஷ்ணரைச்சார்ந்ததாகும். அவர் சாரதாமணி தேவியாருடன் நடாத்திக்காட்டிய வாழ்வு தாந்திரிக சாஸ்திரங்களின் உன்னத லட்சியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுமாகும். இன்று ஆனந்தாச்சிரமத்தில் உடல் கொண்டுலாவும் அன்னை கிருஷ்ணபாயும் தேவியின் அழகு, அன்பு, கருணை முதலாய மங்கள குணங்களுக்கு ஓர் அரிய உதாரணமாக விளங்குகின்றார். அன்னாரின் பிறந்த தினம் புரட்டாதி மாசம் 15-ம் தேதி திங்கட்கிழமையன்று பொருந்தியுள்ளது. இம்முறை நவராத்திரி பூஜையும் அத்தினத்திலேயே ஆரம்பிக்கின்றது. இக்காரணங்கள் பற்றியே 'ஆத்ம ஜோதி' பத்தக்கரத்தி பராபரன் பைந்தொடி, வித்தகி என்னுள்ளம் மேவி நின்றாளே" என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க தேவி மலராகத் தோற்றமளிக்கின்றது.

" வாழ்வையெலாம் கலையாக்கும் மதியம் வேண்டும்
மாசற்ற பேரறிவு வளமும் வேண்டும்
தாழ்மையிலே பெருமை கொளுந்தகைமை வேண்டும்
சகவுயிரில் உனைக்காணும் சுகமும் வேண்டும்
பாழ்படுத்தும் பிணிகளெல்லாம் பறக்க வேண்டும்
பந்தங்களற்ற பெரும்பலமும் வேண்டும்
ஊழ்கடக்கச் சிவஞான சக்தி வேண்டும்
உளையன்றி அருள்பவர்யார்ஒப்பில் அன்னாய்!

# வடிவாம்பிகை தோத்திரம்.

பூமேவும் அழகமும் திலகமிடு நுதலும்
புனைந்தபொற் குழையின் அழகும்
புனிதமுறு நாசிகா பரணமும் புன்னகை
பொலிந்தசெம் பவளவாயும்

தூமேவு முத்தமணிவச் சிரப்பதக்கமும்
துலங்கு பட்டாடையுடையும்
சுடர்விடு சிலம்பினோடு தண்டைகளிசைந்திடுந்
தூயமலரடி இணைகளுஞ்

மாமேவு மரகதம் போலொளிரு மேனியும்
மகிழ் அபயவரதகரமும்
வளர் அருட்பார்வையுங் கொண்டு அடியேனுனது
வடிவினைக் காணவருவாய்!

தேமேவு பூவன நெருங்கு தெங்கம் பொழில்
திகழ் முனீஸ்வரத் தமர்ந்தென்
சித்தமிசை குடிகொண்ட வடிவழகி அம்மையே!
சித்சக்தியான உமையே!

—சிலம்புநாத பிள்ளை

(இற்றைக்கு ஐம்பத்தாறு வருஷங்கட்குமுன்
தேவியின் அருள்கொண்டு இயற்றப்பட்டது.)

---

# அன்னை வருகிறாள்.

அமைதி சாந்தியோ டமர்ந்துபா னிருப்ப
புலரிப் போதில் புகுவளென் அன்னை;
யான்மாத் திரம்செவி மடுத்திட அன்னை
அன்பு மொழியே பேசிநின் றிடுவள்;
அவளெனை யறிவள் அவளையா னறிவன்:
ஒருவரை யொருவ ருருகியாம் நோக்குவம்
இருவரும் யாமே; ஒருவரும் யாமே
காதல் தருமோர் களிவிருந் திதுவே;
அக்கணம் போதி லளப்பருங் களிப்பே.

—சுவாமி ராமதாஸர்.

(தமிழாக்கம்: செல்வி தம்பு இராஜேஸ்வரி)

# நாகேஸ்வரியம்மை தோத்திரம்

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாய வட்டமாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகி

காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூறு பே ராழியே

ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினை
வேணும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நாரணற் கொருசகோ தரியென்ன வந்தருளும்
நாக பூஷணீ நாரணீ இ
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

✣✣✣✣✣○✣●✣✣✣✣○✣✣✣✣✣✣○✣✣✣✣✣○○✣✣✣

சத்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவாநந்தி
யுமையிமைய முதவு மங்கை
உலகுதவு மன்னையா மளைபொன்னி னம்பலவ
ருடனிட மகிழ்ந்து மேவும்

நித்தியகல் யாணிசாம் பவிபுவன கௌமாரி
நிமலமக மாயி யென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கவரு
நின்னடி யவர்க்க ருளுவாய்
நத்துலவு சுத்தமணி மெத்துநயி னாகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

*முத்துக்குமாரசாமிப்புலவர்*

# நாகதீபம் அல்லது நயினதீவு

[துல. சபாநாதன்]

இலங்கையின் பெரும்பான்மை மக்களாகிய பௌத்தர்களுக்கும் சைவமக்களுக்கும் பொதுவான யாத்திரை ஸ்தலமாக விளங்கும் இடங்கள் நம் நாட்டில் மிகச் சிலவேயுள. தென்னிலங்கையில் கானக மத்தியில் கதிர்காமம் உண்டு. வட இலங்கையில் கடலாற் சூழப்பெற்ற நயினதீவு உண்டு. நாக தீபம் புராதனப் பெருமைவாய்ந்த புனித ஸ்தலமாக விளங்குகின்றது. புத்தர் பெருமான் தரிசித்த தலமாதலால், பௌத்தர்கள் இதனைத் தங்கள் புனித ஸ்தலங்களுள் ஒன்றாகப் போற்றுகின்றனர். நாகபூஷணி அம்பாள், சரித்திர காலத்துக்கு முற்பட்டகாலந் தொடக்கமாகக் கோயில் கொண்டெழுந் தருளித் தண்ணொளி பரப்பிவருவதால், சைவ அன்பர்கள் பல பாகங்களிலிருந்தும் வந்தடைகின்றனர். எனவே நாக தீபம் இப்பொழுது பௌத்தர்களும் சைவர்களும் நாடோறும் யாத்திரைசெய்யும் புனித ஸ்தலமாகக் காட்சியளிக்கின்றது.

## சிறந்த துறைமுகம்

நயினதீவு பண்டைக்காலத்திற் சிறந்த துறைமுகமாக விளங்கியது. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினதீவு இருக்கின்றமையினால், தமிழ் நாட்டுக் கப்பல்களும் அந்நிய நாட்டுக்கப்பல்களும், இத்தீவுத் துறைமுகத்தில் தங்கியே சென்றிருத்தல் கூடும். இத்தீவின் மேற்குக் கடற்கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றும் அழைக்கப்படுகின்றது. மேற்குப் பகுதிக் கடல் மிகவும் ஆழமாகவும் பெரிய கப்பல்கள், படகுகள், போக்குவரத்துச் செய்யக்கூடியனவாகவும் இருக்கின்றது. நாகம்மாள் கோயிலிலுள்ள சிலாசாஸனமும் இக்கொள்கைக்கு ஆதரவளிக்கின்றது.

## நாக வழிபாடு:

நாகத்தை வழிபடும் வழக்கம் பன்னெடுங்காலமாகத் தமிழரிடையே காணப்பட்டிருந்தது. ஏன்? இக்காலத்திலும் கூட அவ்வழக்கம் இருப்பதைக் காணலாம். நாக வழிபாடு இக்காலத்தில் அருகிவிட்டதெனினும் நாகம்மாள் ஆலயம் அதனைச் சைவ மக்கட்கு இன்றும் ஞாபகமூட்டி நிற்கின்றது. இக்கோயிலின் பூர்வீக வரலாறு, காலம் என்னும் திரையால் மறைக்கப்

பட்டுள்ளது. இதைப்பற்றி அநேக கதைகளும் கிளம்பின. இதன் புராதன வரலாற்றைப் பார்க்கிலும் தற்போதைய நிலைமையே சைவ மக்களுக்குப் பெரிதும் பயன் அளிப்பது. இவ்வாலயம் சமீபத்திற் புனருத்தாரணஞ் செய்யப்பெற்றுள்ளது. சிலவாண்டுகட்கு முன்னர் கிழக்கு வாயிலில் அழகிய கோபுரமொன்று அமைக்கப்பட்டது. இப்பொழுது மூலஸ்தானத்தில் அழகியதோர் விமானம் கட்டப்பெற்றுள்ளது. மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகத்தையும் நாகப் பிரதிஷ்டையையும் கண்ணுற்ற சிற்ப வல்லுநரான திரு. வை. மு. நரசிம்மன் அவர்களும் விமானத்தைக் கட்டும் திருப்பணியைச் செய்த காரைக்குடி திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் அவர்களும் மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகத்தையும் உற்சவ விக்கிரகத்தையும் வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர். மூலஸ்தானத்திலுள்ள நாகப் பிரதிஷ்டை மிக மிகப் பழைய காலத்தில் ஏற்பட்டதென இவர்கள் கருதுகின்றனர்.

## இரதோற்சவம்:

நாக பூஷணி அம்பாளின் சாந்நித்தியத்தையும் தேஜோமயத்தையும் அருளொழுகு வதனத்தையும் நீங்கள் காணவிரும்பினால் இரதோற்சவத்துக்கு ஒருமுறை சென்று பாருங்கள். ஆனிமாதத்தில் இலங்கையில் பல பாகங்களிலுமிருந்து வடபகுதிக்கு யாத்திரீகர்கள் திரள் திரளாகச் செல்வதைக் கண்டால் அவர்கள் நயினாதீவு நாகம்மாள் ஆலயத்துக்கே செல்லுகின்றனர் எனக் கூறிவிடலாம். ஆண்டுதோறும் ஆனி மாதத்துப்பூரணைத் தினத்தன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. இலங்கையின் வடபாகத்திலுள்ள பல துறைகளிலுமிருந்து வத்தைகளும், வள்ளங்களும் பாய் விரித்தோடும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். இக்காலத்தில் கடல் அலைகளைக் கிழித்து நாவாய்களை முந்திக்கொண்டு மோட்டார் லாஞ்சிகள் செல்வதைக்காணலாம். இலங்கையிலுள்ள சைவ மக்கள் ஆண்டுக்கொரு முறையாவது ஆனி மாதத்தில் நடைபெறும், திருவிழாக் காலத்திற் சென்று அம்பிகையின் திருவருளைப் பெற்று மீள்வது வழக்கம்.

பால் நினைந்தூட்டும் பரிவுள்ள சர்வலோக நாயகியாகிய நாகேஸ்வரி கருணைத் திருக்கோலத்துடன் தேரின் மீதிவர்ந்து

பக்தர்களுக் கருள் புரியுங் காட்சியைக் கண்டு கல்நெஞ்சக் கள்வனும் கசிந்து கண்ணீர் மல்கி வாய்விட்டலறுவதைக் காணலாம். அலங்காரத் தேரானது வீதிவலம் வந்து இருப்பு ஸ்தானத்துக்கு வந்ததும், நயினாதீவுக் கடற்கரை யோரமாகவரிசையாக அன்னப்பட்சிக் கூட்டம் போலக்கிடக்கும் நாவாய்களிலே ஏறியிருந்த சனங்கள் கரகோஷம் செய்து தாங்களும் புறப்பட ஆயத்தஞ் செய்வார்கள். தேர் இருப்புக்கு வந்த பின்புதான் நாவாய்க்காரர் பாய் விரித்தோடச் சம்மதிப்பார்கள். இதற்கு முன் நாங்கள் புறப்படவிரும்பினாலும் நயினாதீவுத் துறைமுகத்திலிருந்து அசைய முடியாது.

## நாகதீப விகாரை:

நாகதீபத்தில் பண்டைக் காலத்தில் ஒரு பௌத்த விகாரை இருந்தது. இதனைப் பௌத்தர்கள் தரிசித்து வந்தனர். பின்னர் இது அழிவுற்றது. புத்தர்பிரான் தரிசித்த புனித ஸ்தலத்தில் மறுபடியும் ஓர் விகாரை கட்டவேண்டுமென பௌத்த அன்பர்கள் கருதி முயன்றனர். இதன் பயனாக இப்பொழுது அழகியதோர் விகாரை நயினாதீவில் அமைக்கப்படலாயிற்று. நாடோறும் நூற்றுக்கணக்கான பௌத்தர்கள் யாத்திரை செய்கின்றனர். அநுராதபுரத்தைப் போலவே இதுவும் புனித யாத்திரை ஸ்தலமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. கடந்த போசன் விழா வைபவத்தின் போது 10,000-க்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் இத்தலத்துக்கு யாத்திரை செய்தனர் எனக் கூறப்படுகின்றது. நாடோறும் ஊர்காவற்றுறையிலிருந்து புறப்படும் மோட்டார் லாஞ்சிகளில் சைவ அன்பர்களும் பௌத்த அன்பர்களும் சகோதர மனப்பான்மையுடன் பிரயாணஞ் செய்வதைக் காணலாம்.

## பள்ளி வாசல்:

நயினாதீவில் முஸ்லிம் சகோதரர்கள் சங்கு குளிப்பதற்காக வந்து சில காலம் தங்குவதுண்டு. எனவே அவர்கள் வணங்குவதற்கென ஓர் பள்ளிவாசலும் நயினாதீவில் உண்டு.

பௌத்தர்களும் சைவர்களும் முஸ்லிம்களும் சகோதர மனப்பான்மையுடன் வாழ்க்கை நடாத்த வழிகாட்டி நிற்பது புனித ஸ்தலமாகிய நாகதீபமாகும்.

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாய:

# சக்திக் கனல்!

சக்திஓம் சக்திஓம் சக்தியென் றே-சுத்த
சக்திக் கனல்வளர்த் தே-சிவ
சக்தி யமுதெங்கும் பொங்குவித் துண்டருட்
சக்தியைப் பெற்றிடு வோம்!

பத்துத் திசையும் பரந்தநின் டோளினள்
பங்கஜத் தாள் பிடித் தே-இருட்
சக்திக் கலிவிழச் சாடியிவ் வையத்தில்
சத்ய யுகம் அமைப் போம்

காலனைச் சாடிய நீலி பயங்கரி
காலைச் சரணடைந் தே-இந்த
ஞாலப் பகைப்படை ஓலமிட் டோடிட
நையப் புடைத்திடு வோம்!

நச்சை யணிந்தவன் இச்சைக் குகந்தவள்
ஞானக் கழலடைந் தே-என்றும்
அச்சம் பொறமை யகந்தைக்கா மாதிகள்
அஞ்சிடச் செய்திடு வோம்!

எண்ணற்ற கோடியண் டங்களைக் கைப்பந்தாய்
எற்றி விளையா டும்-ஜக
தன்னை பராசக்தி பொன்னடிக் காளாகி
அற்புத வாழ்வமைப் போம்!

அணுவுள் அணுவாய் மகத்துள் மகத்தான்
ஆத்மசக் திவளர்த் தே-கொடும்
அணுதண் டரக்கனை மாய்த்துல கெங்கும்பே
ரமைதிக் கனிவிளைப் போம்!

மூலத்தி னிற்கனன் றெழுந்த னைசென்று
முற்றறி வைமலர்த் தி-ஞானப்
பாலைப் புகட்டிடும் வாலைக் குமரியின்
பாதத்தி னைப்புகழ் வோம்!

— "பரமஹம்ஸ தாஸன்"

ஓம்

# தேவி வேண்டுதல்

[பித்துக்குளி]

ஏ பராசக்தி உலகங்களை எல்லாம் நீயே இயக்குகிறாய். படைப்பதும் காப்பதும் அழிப்பதும் அருளி அணைப்பதும் நீயே. ஆனால் உன் ஆடலின் குறும்பு பலரை உன்னைக்கண்டு களிக்க அனுமதிக்க வில்லை. எங்கும் எல்லாம் நீ வைத்த கொலுதான் என்று உணர்கிறேன். பார்க்கிறேன். ஆனால் எஜமானியுனைப் பார்க்கவோ உன் அருள் வெள்ளத்தைப் பருகவோ முடியவில்லை. என்று அருள் வரும்?

பழியை உலகத்தவரின் ஆணவகுணத்தின் மேல் வைத்தாய். உலக ஆணவம் உன்னை மறைக்கும் திரை. அதை அப்படியே நம்பி மயங்கும் எங்களுக்கு அறுத்தெறியும் வன்மையில்லை. உண்மையில் நின் தயவின்றி தப்பும் வழியில்லை.

ஞானம் வைராக்கியம் சாதனை அன்பு முதலிய நலங்களெல்லாம் இம்மா ஆணவத்தால் விழுங்கப்பட்டு விட்டன. நீதான் நன்மைகளை எங்களுக்குக் கொடுக்கவேண்டும். முதலில் கொடுமைகளை நீக்கு.

சண்ட முண்ட பண்டாதி அசுர சக்திகளைக்கொன்று, தேவர்களையும் ஞானியர்களையும் நீ காப்பாற்றினாய் என்று, புராணங்கள் பாடுகின்றன. இதை நான் சத்தியமாய் நம்புகிறேன். ஆனால் பார்க்க வில்லை என்பது உண்மை தானே? அப்படிப்பட்ட பெரிய வீரங்காட்டிய அம்பிகே! எங்களுக்கு இப்பொழுதுள்ள இன்னல்களை மாற்றுவது உனக்குக் கடினமில்லையே. அம்மா! பயம் அவநம்பிக்கை சுயநலம் இவை தலைவிரித்தாடி மலிந்த சமுதாயத்தை குலைநடுங்க வைக்குமுன் நீ ஓடி வந்து நலத்தை நிலை நிறுத்த வேண்டும்.

பல கோடி துஷ்டப் பிள்ளைகள் உலகில் இருக்கலாம். ஆனால் கெட்ட தாய் என்று உண்மையில் ஒருத்தியும் இல்லை.

இருக்கவும் கூடாது. என்பது நீ அறிவாயே! எல்லோரும் நல்லாராக வந்திடுவாய் சக்தி.

அம்மா நீ வைத்த பெரிய கொலுப்பொம்மைகளான ஜீவர்களை துஷ்ட குணங்களான சில பிள்ளைகள் மாற்றியமைத்து விட்டார்கள். எது எங்கு எப்படி யிருக்கவேண்டுமென்று நீதி என்ற பெயரில் நீ வைத்தாயோ எல்லாம் மாறிவிட்டது. பொய் பிதற்றல்கள் புலமையாகி விட்டன. புல்லர்களும் லோபர்களும் பாடல் பெற்றனர். வேதாந்திகள் சுயநலப்போர்வையுள் புகுந்தனர். இயற்கை வஞ்சம் தீர்த்துக்கொள்கிறது. உன்னை நினைவூட்டும் அழகும், புகழும் ஆளைக்கொல்கின்றன. உலகை முன்னேற்றப் பாடுபட்டவர்கள் பதவிக்கும் புகழுக்கும் உயிர் விடுகிறார்கள், தேவீ! மொத்தத்தில் நீ காவலாக வைத்த சக்திகள் மாயா சக்தியுள் மறைந்து விட்டன. அறிவு என்ற பெயரில் ஆணவமும் ஆசையும் கூத்தாடும் இவ்வுலகை நீ காப்பாற்ற வேண்டும்.

எங்கும் எல்லோர்க்கும் அமைதி பொங்கும் வகையில் இந்த நவராத்திரியை அமைத்துக்கொடு- தேவி சரணம். துணை வேறில்லை. அம்மா அபயம் கொடு.

ஓம்

அம்பா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆனந்த வடிவேவா ஆதிசக்தி
இன்பங்கள் பொழியும் இறைவீ வாவா
ஈசர் பாதிநீ எங்கு முள்ளாய்
உன்மய மாக எங்கும் காட்டி
ஊக்கம் ஊட்டு உன்பணி செய்ய
எல்லா நிலையும் இயங்கும் சக்தி
ஏகம் பலவாய் உருவரு வானாய்
ஐந்தொழிலுனது ஆடல் சக்தி
ஒன்று முனையன்றி யில்லை சக்தி
ஓங்கார முதல் பலமூல சக்தி
ஔடத மன்பர் பவத்திற்குநீ
அஃது இஃதென்று வேதங்காட்டா
அன்பே, அம்மே சக்தி வாவா
ஆனந்தமுன் புகழ்பாடல் கேட்டல்
இதற்குப் பிறப்பேன் பலகோடி முறை.

# காரை தீவுக்கண்ணகி அம்பாள்

[ செல்லத்துரை ]

கிழக்குமாகாணத்தின் திலகமென மிளிரும் காரைதீவானது ஓர் சைவக்கிராமமாகும். முத்தமிழ் மணியாம் விபுலானந்தனைப் பிறப்பித்த பெருமையும் இக்கிராமத்துக்கே உரியது. சித்த புருடனும் சித்தானைக்குட்டிச் சுவாமி வாழ்ந்ததும், சமாதி நிலை அடைந்ததும் இப்பதியேயாகும். கடல் சூழ் இலங்கைக் கயபாகு மன்னன் பத்தினித் தெய்வ வழிபாட்டை இவ்விலங்கை மாதீவில் ஆரம்பித்து வைத்ததின் பேருகப் பல்லாண்டுகளின் முன் பத்தினித் தெய்வமாம் கண்ணகித் தேவியாருக்கு இங்கும் ஓர் ஆலயம் அமைக்கப்படலாயிற்று. இக்கோயில் பழமையும், பண்பு சார் பெருமையும் வாய்ந்தது. சாதி மத வேறு பாடின்றிச் சகலராலும் போற்றப்படுவது. இவ்வம்மன் ஆலயத்தில் பௌர்ணமியை அடுத்து வரும் வைகாசித்திங்கள் தோறும் திருநாள் கொண்டாடப்படும். இக்கொண்டாட்டம் எட்டுநாட்கள் வரை தொடர்ந்து நடைபெறும். கிராமமே பக்திப்பாவசத்தில் திகழும். இந்நாட்களிலே பத்தினித் தெய்வத்தின் வரலாற்றைக் கூறும் கண்ணகையம்மன் வழக்குரை இனிமையாகப் பாடப்படும். விபுலானந்த சுவாமிகளென பல்லோராலும்புகழ்ந்துரைக்கப் படும் மயில்வாகனனர் சிறு பாராயத்திலே தம்மன்னையாரோடு இப்புனித சந்நிதி புகுந்து அங்கு பாடப்படும்- பத்தினித்தெய்வத்தின் வழக்குரை நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனித்து வருவது வழக்கம். பத்தினித் தெய்வத்திலுள்ள பக்திவிசுவாசமும் வழக்குரைப்பாடலிலுள்ள நவரசச்சுவையும் பிற்காலத்திலே சுவாமி அவர்களை சிலப்பதிகார ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி அதன்பேருக அகிலம் போற்றும் யாழ் நூல் இயற்றுவதற்கு ஏதுவாக இருந்ததும் இவ்வம்மையாரின் கடாட்சமேயாகும். இவ்விதம் பண்டு தொட்டுப் பேரும்புகழும் பெற்ற இப்புனித ஸ்தலத்தில் இன்று அழகிய கோபுர வாயில் ஒன்று ஆக்கப்பட்டது. திறப்புவிழா இம்மாதம் பதினேழாந் திகதி சுக்கிரவாரத்தன்று அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது, கோபுரம் மின்சார வர்ணவிளக்குகளால், அலங்கரிக்கப்பட்டது, இவ்விழாவிற்கு சாதி, மத பேதமின்றிச் சகலரும் சமூகந்தந்து வழிபாடு செய்ததுமன்றி ஒலிபாப்பியின் மூலம் வெளிப்படுத்திய சொற்பொழிவுகளை உளமகிழ்ச்சியோடு கேட்டானந்தித்தார்கள், அனைவர்க்கும் அம்பாளின் திருவருள் கிடைப்பதாக.

# அம்மா

உலகத்திலுள்ள சகல ஜீவபிராணிகளுக்கும் அம்மா என்பது பொதுச்சொல். மிருகங்கள் பறவைகளும் தங்கள் பாஷையில் அம்மா என்கின்றன. குழந்தை பிறந்த உடனே யாருங்கற்றுக் கொடுக்காமலே அம்மா என்னுஞ் சொல்லை உச்சரிக்கிறது. குழந்தையைக் கருத்தாய் வளர்க்கும் பெற்றோர் இதை அனுபவத்தில் கண்டிருப்பர்.

குழந்தை பூமியில் உதித்ததும் ஆ, ஆ, ஆ என்று அழுகிறது. வாய் அலுப்படைந்த உடனே வாயை மூடி ம், ம், ம் என்று அழுகிறது. பின்பும் முன்போல் வாயைத்திறந்து அழமுயற்சிக்கிறது. 'ம்', அழுகையோடு 'ஆ' அழுகை சேருமிடத்தும்மா என்ற சத்தம் பிறக்கிறது.

குழந்தை அழத்தொடங்கிய நேரம் முதல் அவதானித்து வந்தால் மூன்று எழுத்துக்களும் உச்சரிப்பதை அறியலாம். அ—ம்—மா, அ எனும் ஒலி யே நீண்டு ஆவென ஒலிக்கிறது. இறைவன் இதனுள் பெரியதோர் தத்துவத்தை வைத்தேஅச்சொல்லைச் சகல உயிர்களுக்கும் பொதுவாய் அமைத்தான். 'அ' என்றால் சிவன், விட்டுணு, அழகு எனப்பொருள். 'ம்' என்றால் இன்பம் எனப்பொருள். 'மா' என்றால் அழகு, அழைத்தல் அறிவு, அன்னம் எனப்பொருள், மூன்று எழுத்துக்களின் கருத்தையும் ஒன்று சேர்த்தால் சிவனை இன்பத்தோடு அறிதல் என்றோ உலகம் முழுவதும் அழகு, இன்பமயம் என்றோ, பொருள் படுகிறது.

உயிர்கள் யாவும் இறைவனிடத்திருந்தே பிரிந்தன. பிரிந்த உயிர்கள் மாயையால் மறைக்கப்பட்டன. இறைவன் பாதத்தை நோக்கியே பிரயாணஞ் செய்கின்றன. அருளிறைவன் கண் முன்னே இருந்தும் மாயையால் மறைக்கப் பெற்று அவனைத் தேடி அலைகின்றன. பிறவி தோறும் தேடி அலைகின்றன.

முற்பிறப்புக்களிலெல்லாம் இறைவனைத்தேடி அழைத்த பழக்கத்தினாற் போலும் குழந்தை பிறந்த உடனே அம்மா என்கிறது. "நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே', என்பதன்படி இறைவனைப்பற்றிய பொருள் மறந்து விட்டாலும் சொல் மறக்கப்படவில்லை. அம்மா எனுஞ் சொல் உயிருடன் கலந்தது; உயிருக்குயிராய் உள்ளது. வள்ளுவர் "அகரமுதல்"

என்றே குறளைத் தொடங்குகிறார். அகரத்தின் பெருமைக்கு வேறுஞ் சான்று வேண்டுமோ? உமாபதி சிவாசாரியார் "அகரவுயிர் போலறிவாகி" என்கிறார்.

வள்ளுவர் முதற் குறளிலே ஆதிபகவன் எனத்தாயைமுன் வைக்கிறார். ஆண்டவன் இல்லை என்று ஆணையிடும் நாஸ்திகன் கூட அம்மாவை நம்புகிறான். அம்மாவுக்கு முதலிடம் கொடுக்கிறான். தன் சமயத்தைப் பிறன் தூற்றப்பார்த்துக்கொண்டு நிற்பவன் தன் கடவுளைப் பிறன் குறை கூறப்பார்த்துக்கொண்டு நிற்பவன் தன் தாயைப்பற்றி ஒருகுறை சொல்லிவிட்டால் உயிரையே விட்டுவிடுகிறான். இறைவனுக்கு ஆயிரம் நாமங்களிருப்பினும் எல்லோராலும் ஒரே மனதாக சாதிசமய கொள்கைவேறுபாடின்றி ஒப்புக்கொள்ளப்பட்டஓரேசொல் "அம்மா" என்பதே.

குழந்தை தந்தையிடத்துக் கேட்டுப்பெருத எத்தனையோ விஷயங்களைத்தாயினிடத்து ஒரே அழுகையுடன், ஒரு சொட்டுக் கண்ணீருடன் மிக இலகுவாய்ப் பெற்றுவிடுகிறான். பரமசிவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற சுந்தரர் "பித்தா பிறைசூடி' என்று ஆண்டவனை தமிழ் செய்கிறார். அப்பனும் அம்மையும் வந்து பாலூட்டிய ஞானசம்பந்தக்குழந்தை "தோடுடைய செவியன்" என்று ஆண்டவனைத் தமிழ் செய்கிறது.

மீனாட்சி அம்மையாரால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற சுத்தானந்தக் குழந்தை "அம்மா பரதேவி" என்று ஆண்டவனைத் தமிழ் செய்கிறது. இப்பாடல்களை இசையுடன் பொருள் விளங்க அனுபவித்துப் படித்துப் பாருங்கள். "அம்மா" என்கிறபோது ஒரு இன்பம், மென்மை, அழகு, அன்பு இவையெல்லாம் சேர்ந்து ஓர் ஆனந்த உணர்ச்சி உள்ளத்தில் உண்டாகிறதல்லவா? இராமக்கிருஷ்ண பரமகம்சர் அம்மா, அம்மா என்றுதானே காளிதேவியிடம் கதறினர். மணிவாசகப்பெருமானும் "அம்மையே அப்பா" என்று பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அன்னையைப் போல் அழைத்தாரல்லவா

அருணகிரியார் அநுபூதிநிலையில்

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே"

என்கிறார். அம்மா என்று அழைக்கத்தெரிந்து விட்டால் பின்பு வேண்டிய தொன்றுமில்லை. குழந்தை அழைத்தால் அம்மா முன் வந்து வேண்டிய தெல்லாம் உதவுவாள்.

# ஆதி சக்தி
# அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் சந்த்ரப்ர பாயை நம
ஓம் ஷோடஸ கலாயை நம
ஓம் யுவ ரூபிண்யை நம
ஓம் ஸௌந்தர்ய லாகராயை நம
ஓம் தேஜோ மய்யை நம
ஓம் ரக்த வஸ்த்ராயை நம
ஓம் நவரத்ன கிரீடாயை நம
ஓம் காருண்ய சக்ஷுஷே நம
ஓம் லம்பித கேசாயை நம
ஓம் வைடூர்ய குண்டலாயை நம
ஓம் ஸிந்தூர தாரிண்யை நம
ஓம் கம்பு கண்ட்யை நம
ஓம் சதுர்புஜாயை நம
ஓம் ஸூல பாணின்யை நம
ஓம் கட்க ஹஸ்தாயை நம
ஓம் அபய ஹஸ்தாயை நம
ஓம் திவ்ய குஸும மாலாலங்க்ருதாயை நம
ஓம் ஸர்வாபரண பூஷிதாயை நம
ஓம் பத்ம பாதாயை நம
ஓம் அஸூக்த பாச ஹ்ருதயாகோ சராயை நம
ஓம் அசுர குலாந்தகாயை நம
ஓம் அனந்த ரூபிண்யை நம
ஓம் அனாதி தத்வாயை நம
ஓம் அனிர் வசனீயாயை நம
ஓம் அக்ஷர ரூபிண்யை நம
ஓம் அஞாத்யவித்யா நாசின்யை நம
ஓம் ஆதி சக்த்யை நம
ஓம் ஆதி மத்யாந்த ரஹிதாயை நம
ஓம் இந்த்ரிய நிக்ரஹ காரிண்யை நம
ஓம் ஈஸ்வர்யை நம
ஓம் சேவலாத்விதீயை நம
ஓம் கர்ம ரக்ஷிதாயை நம
ஓம் கர்ம பலதாயைநம
ஓம் கருணாமூர்த்யை நம
ஓம் காஞ்சி ப்ரதிஷ்டிதாயை நம
ஓம் காமக்ரோதாதி ஷட்வர்க்கநாசின்யை நம
ஓம் கலாதீதாயை நம

ஓம் காசிவாஸின்யை நம
ஓம் காமினி காஞ்சன நாசின்யை நம
ஓம் குண்டலின்யை நம
ஓம் கோடி சூர்ய தேஜஸ்வின்யை நம
ஓம் கோமளா ஹ்ருதயாயை நம
ஓம் சாஞ்சல்ய நாசின்யை நம
ஓம் சராசராயை நம
ஓம் சித்ஸுகாயை நம
ஓம் சிதானந் தாயை நம
ஓம் சின்ம யாயை நம
ஓம் சின்முத்ராயை நம
ஓம் ஜகன் மாத்ரே நம
ஓம் ஜகன் மோகின்யை நம
ஓம் ஞான தாயின்யை நம
ஓம் ஞான ரூபிண்யை நம
ஓம் த்ரிகுணாத்ம காயை நம
ஓம் த்ரிகுண தீதாயை நம
ஓம் த்ரிமூர்த்தி பூஜிதாயை நம
ஓம் தாக்ஷாயிண்யை நம
ஓம் நாதப்ரம்மாத்மகாயை நம
ஓம் நிர்குணாயை நம
ஓம் நித்ய த்ருப்தாயை நம
ஓம் நீரூபாயை நம
ஓம் நிவ்ருத்யை நம
ஓம் நிஷ்களாயை நம
ஓம் ப்ரணவஸ் வரூபிண்யை நம
ஓம் பரம பாவனாயை நம
ஓம் பூர்ணாயை நம
ஓம் பந்த ரஹிதாயை நம
ஓம் பவ தாரிண்யை நம
ஓம் மங்கள மூர்த்தியை நம
ஓம் மந்தஸ் மிதாயை நம
ஓம் மன இந்த்ரியா கோசராயை நம
ஓம் மஹா காள்யை நம
ஓம் மஹா சக்த்யை நம

ஓம் மஹா தித்யாயை நம
ஓம் மஹா யோகித்யே யாயை நம
ஓம் மஹா லக்ஷ்ம்யை நம
ஓம் மஹா வேத்யை நம
ஓம் மஹி ஷாசுர மார்த்தின்யை நம
ஓம் மாதவஸோதர்யை நம
ஓம் மாயாயை நம
ஓம் மூலப்க்ருத்யை நம
ஓம் மோக்ஷதாயின்யை நம
ஓம் யஸஸ் வின்யை நம
ஓம் லீலா விநோதின்யை நம
ஓம் லோக தாரிண்யை நம
ஓம் விக்ருத்யை நம
ஓம் வித்யா வித்யா ரூபிண்யை நம
ஓம் விராட் ரூபிண்யை நம
ஓம் வேத மாத்ரே நம
ஓம் ஸங்கர்யை நம
ஓம் சம்புப்ரியாயை நம
ஓம் சாந்தஸ்வரூபிண்யை நம
ஓம் ஸாரதாயை நம
ஓம் ஸாஸ்வதாயை நம
ஓம் லீலா காமின்யை நம
ஓம் ஸுத்த சித்தப்ரகாஸின்யை நம
ஓம் ஸுத்ர ஸேத்வாயை நம
ஓம் ஷண்முகப்ரியாயை நம
ஓம் ஸ்ருஷ்டிஸ்திதிலய காரிண்யை நம
ஓம் ஸகலகலா வல்லபாயை நம
ஓம் ஸகல ஸித்திமத்யை நம
ஓம் ஸகல முனிஸேவிதாயை நம
ஓம் ஸகல ஹ்ருந்வாஸின்யை நம
ஓம் ஸதாஸி வாயை நம
ஓம் ஸர்வஞ்ஞாயை நம
ஓம் ஸர்வாந்தர்யா மிண்யை
ஓம் ஸிம்ஹவாஹனாயை நம
ஓம் ஸுந்தர மாத்ரே நம

-சுந்தரம்

# "சைவம் கண்ட சமதர்ம சமத்துவம்;

ச. ப. ஷ. சுந்தரசர்மா)

சமதர்மம் சமத்துவம் என்பனவெல்லாம் தற்காலத்திலேற்பட்ட தீண்டாமை, ஆலயப்பிரவேசம் ஆகிய வற்றாலோ அன்றி சுயமதிப்பு என்னும் பசுத்தோலால் (நவீன சொற்றொடர்புனைந்து நாஸ்திகநூல்களைப் பிரசுரித்து நாடெங்கும் சிதறிவிட்டு நளினஞ் செய்யும் நரகாசுரர்கள்) தம்மையோ தமது தகிடுதத்தங்களையோ பிறரறியாது போர்த்திக்கொண்டு நன்மக்களைப் புன்மக்களாக்கும் (சிலரது) தலைகீழ்ப்போக்கால் வந்த தடுமாற்ற மாகாது.

இது ஆதிகாலந்தொடக்கம், ஆராய்வினெல்லைக்கு மப்பாற்பட்ட காலத்திலே உள்ளவர்களாலேயே அநுட்டித்து வந்த சைவ நீதி வழியானே ஆத்மீகமாக ஏற்பட்ட அருள் வாழ்வின் ஒப்பற்ற உயர் நெறியாகும். இங்ஙனம் அக்காலவறிஞர் குழாம் பேணி வைத்த நன்னெறியையே இக்காலத்தில் ஒரு சில வெளிபார்குழாம் விபரீதார்த்தமாக்கி நாஸ்திக நூல்களாக வெளிப்படுத்தி நற்றமிழ்க்கலையையே நையாண்டி செய்கின்றது.

இத்தகைய கூட்டத்தை அக்காலச்சமணர் குழுவுக்கு ஒப்பிட்டால் மிகையாகாது. ஏனெனில் அக்காலச் சமணர்குழுவும் தீயிலிடுவித்துக் கழுவேறிய அதீத மகிமையையுடைய நூலையே இக்கூட்டமும் தீபரவட்டும் என்கிறது. எம் சமயகுரவராம் ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளியிருந்த மடத்திற்குத் தீவைத்த பொழுது பிள்ளையார் சமணர்களைச் சபிக்க மனமின்றி அவரது செயலுக்குக் காரணனாகவிருந்த அரசனையே நொந்தார். மக்கள் செய்தீவினை மன்னரைச் சாருமென்பது சைவ நீதியாகவே இறைவனை வேண்டிப்பாடினார்.

" தஞ்சமென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்சலென்றருள் ஆலவாய் அண்ணலே
வஞ்சஞ்செய்து அமணர் கொளுவுஞ்சுடர்
பஞ்சவன் தென்னன் பாண்டியற் காகவே."

பாண்டியனுக்குச் சூலை நோயாக பிள்ளையாரது மடத்திற்கு வைத்த தீ மாறியது. அரசனும் உண்மையையுணர்ந்து மெய்ச் சிலனுனன் என்பது சேக்கிழார் வாக்கியம். அதுபோலவே அந்த, உண்மையை அறியாது இருக்கும் நம்மவர்! சிலருக்கு உண்மை நெறியில் ஊக்கந்தருவிக்கவந்த இக்கால சமண் குருவாகத் தோற்றியுள்ளது. இக்கூட்டத்தாரையே, மணிவாசகசுவாமிகள் "முத்தி நெறியறியாத மூர்க்கர்" எனக் கூறியருளினர். ஆகவே, நாங்கள் கடைத்தேற வழிதேடுவதாயிருந்தால் முதலில் மாயா தோற்றமாக வுருவெடுத்த இவ்வவற் காளன்களுக்கு நன்னெறிகாட்டி

"மானிடப் பிறவிதானும் வகுத்ததுமனம் வாக்காயத்,
தானிடத் தைந்துமாடும் அரன்பணிக்காகவே"

என்னுமுண்மையுணர்வுண்டாகச் செய்யும்படி எல்லாம் வல்ல இறைவனை முழுமனதுடன் வேண்டிக்கொள்வதேயாகும். இதுவே சைவம் கண்ட சமதர்ம சமத்துவமாகும். தான் கெட நேர்ந்தாலும் பிறர் வாழப் பிரார்த்திப்பதுவே மேலான சமதர்மமும் மெய்ஞ்ஞான சமத்துவமுமாகும். இதனையே நம்மூதாதையர்

"ஓடும் செம்பொன்னும் உறவும் பகையும் ஓர்,
கேடுஞ் செல்வமும் கீர்த்தியும் நிந்தையும்,
வீடுங் கானமும் வேறற நோக்குதல்.
கூடுந் தன்மையுங் கொளும்மனம் நன்மனம்"

எனக் கூறிப் போந்தார்கள். ஆத்மீகமாக அம்மை அப்பனின் அருள்வழியாலேற்படாத சமத்துவம் சமத்துவமாகாது. "நாவன்மையிருந்துவிட்டால், நாடாளமுடியாது" "நவீனநூல் கற்றுவிட்டால் நற்சைவநெறிகாண முடியாது." "அரசியலதிகாரமிருந்தால் (சைவ) ஆகமத்திற்கு அதிகாரியாக முடியாது." "எல்லையில் வீரமிருந்து விட்டால் எம்சைவ நெறியை வென்றுவிட முடியாது" "உலகின் தந்தையெனப் பெயர்பெற்றால் சைவஉள்ளத்துணர்வின் தந்தையாக முடியாது." தவத்தளவேயாகும் தான் பெற்ற செல்வம், குலத்தளவேயாகுமாம் குணம்" என்பதெல்லாம் பொய்யா மொழிகளாகும். இங்ஙனமாதலால் நல்லொழுக்க நெறிப்பட்டு ஆத்மீகமான சமத்துவங் காண்பிப்பதுவே சைவங்கண்ட சமத்துவமாகும்.

# உற்றார் யார்?

(செல்வநாயகம்)

வினவடிவமாயமைந்த அகண்ட சிறந்த விஷயம். இகத்திலும் பரத்திலும் எய்த வேண்டிய பேறுகள் யாவும் தன்னகத்துக்கொண்டு சிறப்போடு விளங்குகின்றது. இவ்விஷயத்தில் பல்வகை ஆராய்ச்சிகள் செய்யக்கூடிய நெறிகளுண்டு. அவை யாவன உற்றாரென்ற பதத்தின் பொருளென்ன? உற்றவரால டையும் சகாயம் யாது? உற்றார் எத்தன்மையுடையாராயிருக்க வேண்டும்? உற்றாரை அடைதலால் எய்தும் பயனென்ன? என்பதாம். இத்தகைய அணுக்களோடு கூடியது இச் சிறந்த விஷயம்.

முதற்கண் இதன் பொருள் என்ன என்பதை ஆராய்வாம். உற்றாரென்ற பதம் ஒருவருக்கு வேண்டிய நன்மைகளை வேண்டிய வேளைகளில் நல்குபவர் என்று பொருள் தந்து நிற்கின்றது. மாணிலத்தில் உடம்பெடுத்த உயிர்கள் ஜெனித்தபின் தாயாரியற்றும் பணிக்கும் அன்புக்கும் துணைக்குமுரியராகின்றார்கள். அதன் பின் தாயார் மூலமாகத் தந்தையை அறிந்து அவர் மூலமாக கல்வியெனும் சகாயத்தைப் பெறுகின்றார்கள். அதன் பின் தான் உதித்த உதரத்தில் முன்னும் பின்னுமாக அவதரித்த சகோதர சகோதரிகளுடைய அன்புக்கு உரியராகின்றார்கள். பின்னர் ஓர் உயிர்த் தோழனோடு உயிர்த் தோழமை பெற்று அவர்களிடம் சகாயம் பெறுகிறார்கள்.

ஒரு குருவினுடைய சகாயத்தைப் பெற்று அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானமும் பெற்று ஆன்ம ஈடேற்றமும் பெற்று உய்வெய்தி விளங்குகின்றான். உரிய வயதிலே ஓர் பெண்ணுக்கு மங்கல சூத்திர மணிந்து வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இல்லற வாழ்க்கையில் இன்பத்திலிளைத்து வாழ்கின்றான். அஃதுமன்றி தவஞ் செய்து அருமையாகப் புத்திரனைப் பெற்று அவன் வாயிலாக நரக கதி தவிர்ந்து உய்வெய்தி நிற்கின்றான். இவர்களால டையும் சகாயத்தை யமைத்து அறிஞர் பின்வருஞ் செய்யுளால் விளக்குகின்றார்:-

(தொடரும்)

# ஓம் சக்தி என்பவர் உண்மை காண்பார்

[பாரதியார்]

வைய முழுதும் படைத் தளிக்கின்ற
மஹாசக்தி தன்புகழ் வாழ்த்து கின்றோம்
செய்யும் வினைக ளனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே

பூதங்க ளைந்தி லிருந் தெங்கும்-கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டு மென்றே.

வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவு கின்றோம்
ஏக நிலையி லிருக்கும் அமிர்தத்தை
யாங்க ளறிந்திட வேண்டுமென்றே

உயிரெனத் தோன்றி யுணவு கொண்டே வளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்க வென்றே

சித்தத்திலே நின்று சேர்வதுணரும்
சிவசக்தி தன்புகழ் செப்புகின்றோம்
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டுமென்றே

மாறுதலின்றிப் பராசக்தி தன் புகழ்
வைய மிசை நித்தம் பாடுகின்றோம்,
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டு மென்றே

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சத்தி யென்றுரை செய்திடுவோம்:
ஓம் சக்தி யென்பவர் உண்மை கண்டார் சுடர்
ஒண்மை கொண்டார் உயிர்வண்மை கொண்டார்.

# செய்தித்திரட்டு.

## ஸ்ரீ சாது முருகதாஸ் அவர்களின்
## இலங்கை விஜயம்.

திரு. M. s. திருவிளங்கம் அவர்களின் நன்முயற்சியால் ஸ்ரீசாது முருகதாஸ் அவர்கள் இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்று கூட்டுப்பிரார்த்தனைகள் நடாத்தி மக்களுக்கு ஆத்மீக உணர்ச்சியை ஊட்டினூர்கள்.

24-8-51 நல்லூர்க்கந்தசுவாமி கோவில் கார்த்திகைத் திருவிழாவிலன்று சுகாதாரப்பகுதியாரின் ஆதரவில் முருகனைப் பற்றிய பக்திப்பாடல்கள் பாடினூர்கள்.

25-8-51 உரும்பிராய் ஞான வைரவசுவாமி கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. அத்தருணம் உலகில் எது இன்பம்' என்பது பற்றி உபந்யாசம் செய்தார்கள்.

26-8-51 காங்கேசன்துறை சுகாதார நிலையத்தில் முதன் முறை கூட்டுப்பிரார்த்தனையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஆரோக்கியத்தின் இரகசியத்தைப்பற்றி விளக்கினூர்கள்- ஆரோக்கியக் கேட்டிற்குக்காரணங்கள் 1 பரம்பரை 2 சூழல் 3 அகங்காரம் 4 கூடாத பழக்கம் ஆகிய நான்கு எனக்குறிப்பிட்டார்கள்.

அன்றையத்தினம்மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயிலிலும் விசேட கூட்டுவழி பாடு நடைபெற்றது-

29-8-51 கொழும்பு சத்சங்க அன்பருள் ஒருவரான காலஞ்சென்ற திரு. ஆழ்வார்ப்பிள்ளை அவர்களுடைய இல்லில் அவருடைய ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை ஒன்று நடைபெற்றது-

பின்னர் வதிரித் தேவரையாளி வித்தியாசாலையில் திருவிளங்கம் அவர்களுடைய கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்பெற்ற••கூட்டத்தில் சுவாமிகள் "முருகன் அருள் வேண்டல்" என்பது பற்றிப் பேசினூர்கள். முருகன் அருளை நாம் ஏன் வேண்ட வேண்டும்? எப்படி வேண்ட வேண்டும்? முத்தி அடைவதற்கு திருப்தி, பக்தி, அமைதி ஆகிய மூன்றும் தேவை என்பன பற்றி இனிது எடுத்துரைத்தார்கள்.

28-8-51 சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் சந்நிதானத்தில் திருவிளங்கம் அவர்களின் கூட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாயது கொழும்பு இசைக்கலைமன்ற மாணவிகள் இசை விருந்தளித்தார்கள். சுவாமிகள் சக்திவேண்டல் என்பது பற்றி இனியதோர் உபந்நியாசம் செய்தார்கள்.

29-8-51 கொக்குவில் இராமக்கிருஷ்ண வித்தியாலயத்திலும் மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோயிலிலும் பிரார்த்தனை நடைபெற்றது.

30-8-51 தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலிலும் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலிலும் பஜனை நடைபெற்றது. ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலையில் "முருகன் அருள் வேண்டல்" என்பது பற்றி சங்கீத உபந்நியாசம் செய்தார்கள்.

இன்னும் நாவலப்பிட்டி, பூண்டுலோயா ருகலை, மஸ்கேலியா, கடவளை, அல்லிதோட்டம் குருநாகல் போன்ற இடங்களிலும் சாது அவர்களின் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

ஸ்ரீசிவானந்தர் ஜெயந்தி—8-9-51 சனிக்கிழமை நாவலப்பிட்டி இந்துவாலிபசங்க ஆதரவிலும் கொழும்பு தெய்வ நெறிக்கழகச் சார்பிலும் கொண்டாடப் பெற்றது.

மஹாநவராத்திரி திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம், கொல்லமேட்டுத்தெருவிலிருக்கும் 3ம் இலக்க வீட்டில் 1-10-51 முதல் 11-10-51 வரை ஸ்ரீ சாயிமந்திர் சபை ஆதரவில் சாது ஸ்ரீமுருகதாஸ் அவர்களைத் தலைமையாகக் கொண்டு மஹாநவராத்திரி கொண்டாடப்பெறும்.

சுந்தரர் குருபூஜை மாவத்தகம சைவமகா சபையிலும் உணுப்பிட்டி சன்மார்க்க சங்க ஆதரவிலும் கொண்டாடப் பெற்றது.

கதிர்காமம் சேவாசங்கம் திரு. K. குமாரவேல் M. P. அவர்கள் தலைமையில் 10-9-51 ல் நடைபெற்றது.

சன்மார்க்க சங்க ஆண்டுவிழா.

பழனித்தாலுக்காவைச் சார்ந்த ஸ்ரீரங்ககவுண்டன் புதூரில் ஷஷ்டி விழா 25-8-51ல் நடைபெற்றது, அன்று திருஅருட்பா பாராயணம் நடந்தபின் வள்ளலார் திருஉருவம் அருட்பாபஜனையுடன் ஊர்வலம் வந்தது.

# மங்கள ஆரத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி—ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய வெனதினம் பாடிப்பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத்தா—ஓம் ஸ்ரீ

திருப்தியும் இன்பமும் வாழ்வில்துலங்க
தேவை எல்லாம் மறைய—அம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை—ஓம்ஸ்ரீ

இரண்டுகள் போக மூன்றுகளகல
ஈச்வரி பலமருள்வாய்—அம்மா
கரங்குவித்தோமினி காலவிடோமடி
கருணையுடன் அணைப்பாய்—ஓம்ஸ்ரீ

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்—அம்மா
தேசுடன்வாழ காட்டடி காக்ஷீ
தேவியுன் அடைக்கலம் நாம்-ஓம் ஸ்ரீ

நமஸ்கார மிருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து—அம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைதியை தா—ஓம் ஸ்ரீ

ஓம் கணபதி ஸாயி ஷண்முகநாதா
ஓம் த்ருகுண தீத க்ருஷ்ண
ஓம் ஸ்ரீராம மகாதேவ சம்போ
ஓம் ஜெய ஜகஜ்ஜனனீ—ஓம் ஸ்ரீ

பித்துக்குளி முருகதாஸ்

ஆத்ம ஜோதி சந்தாதாரா்
ப. ச. தி... சா—புஸ்கவி... நா... நிதி, கொழும்பு.
இராமநாதன் ... கங்கா..., பிளா... ட்டர், ...

## சந்தாதாரர்களுக்கு!

அன்பர்களே!

இந்த இதழ் உங்கள் கையில் கிடைக்கும்போது 3-ம் வருடத்தில் 11-ம் மாசம் முடிகிறது. இவ்வாண்டுச் சந்தாவைச் சில அன்பர்கள் இன்னும் அனுப்பாது இருக்கிருர்கள். தயவுசெய்து இவ்விதழ் கைக்குக் கிடைத்ததும் உங்கள் பழைய சந்தாவோடு புதிய சந்தாவையும் அனுப்பிவைக்க வேண்டுகிறேம். ஆத்மஜோதியிலே அங்கத்தவர்களாயுள்ளவர்கள் எவராவது வருடம் 3 ரூபா ...ட்டத் தகுதியில்லாமையினுல் பணம் அனுப்பத் தவறுபவர்கள ...ல. 3 ரூபாவைத் தபால் கந்தோரில் சென்று அனுப்புவதில் ...ப்படும் ஒரு சிறு சோம்பலே காரணம்- சிலர் அடுத்தமாதச் ...பளத்தில் அனுப்புவோம் என்று நினைப்பார்கள். சோதி கைக்கு கிடைக்கும்போதெல்லாம் ஒவ்வொருமாசமும் அதையே ...ப்பார்கள்- அன்பர்கள் ஒவ்வொருவரும் இப்படியே நினைத்து ...டால் கடைசியாக ஒருவருடைய பணமும் இவ்விடம் வந்து ...ாது. 4-ம் ஆண்டுப் பணத்தையே இந்த மாசத்தில் அனுப்...ட்டால் "நான் பின்னர் ஒரு வருஷத்திற்குச் சோதியின் பண...பமாகக் கவலைப்படக் தேவையில்லை" என்று ஒவ்வொருவரும் நினைப்பார்களானுல் தனித்தனியாக ஒவ்வொருவருக்கு எழுதும் கடிதங்களுக்குரிய செலவு மிச்சமாவதோடு சோதியும் விருத்தியடையும்.

அன்பர்கள் இதனை மனத்துட்கொண்டு 4-ம் ஆண்டுப் பணம் உட்பட வரவேண்டிய பணம் முழுவதையும் ஐப்பசி மாசத்துள் அனுப்பிவைக்க வேண்டுகிறேம்.

தொடர்ந்து பத்திரிகை வேண்டாதோர் ஒரு காட்மூலம் தெரிவிக்கவேண்டுகிறேம்.

ஐப்பசி மாசத்திற்குள் பணம் அனுப்பிவைக்காதவர்களுக்கு கார்த்திகை இதழ் **V P** மூலம் அனுப்பிவைக்க நேரிடும்.

---

ஆத்ம ஜோதி வளர்ச்சிநிதி அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது ஜோதியின் வளர்ச்சியை விரும்புவோர் உதவிபுரிய வேண்டுகிறேம்·

Registered at the G. P. O. as a News Paper No. H. C. 59/300



நால்வர் படங்கள் ஒவ்வொரு சைவர்கள் வீட்டிலும் அவசி
இருக்கவேண்டியது. வேண்டிய அளவுகளில் கிடைக்கும். நா
படம்போட்ட "கலண்டர்கள்" தயார் செய்து கொடுக்கப்ப

நால்வர் மடாலயம், பேரூர் P. O. கோயமுத்தூர். S.

## ஸ்ரீ இராமக் கிருஷ்ண விஜயம்

(1921-ம் ஆண்டில் இருந்து வெளிவருகிறது)

வருட சந்தா ரூ. 3/- தனிப்பிரதி அணா 6.

ஒவ்வொரு தொகுதியும் தை மாதத்திலிருந்து தொடங்குகிறது.
சந்தா தை அல்லது ஆடி மாதத்திலிருந்து தொடங்கலாம்.

ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடம், மைலாப்பூர், சென்னை.

"குமரகுருபரன்" தமிழ் திங்கள் வெளியீடு.

சமயத்தொண்டு, தமிழ்மொழி வளர்ச்சி, பொதுநலச்சேவை
முதலானகருத்துக்களைப்பிரதானமாகக்கொண்டுநடைபெறுவது

வருடச்சந்தா ரூபா 1-50

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மடம், ஸ்ரீவைகுண்டம், தென் இந்தியா.

கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன் பதிப்பாசிரியர் நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி இலங்கை
அச்சுப்பதிப்பு சரவண அச்சகம்—நாவலப்பிட்டி. 1[illegible]